# பூமித் தாயைக் காப்போம்

## பிரதமர் மோடி



சுற்றுச்சூழல், பருவநிலை மாற்றம் தொடர்பான ஜி20 நாடுகளின் அமைச்சர்கள் பங்கேற்ற மாநாட்டை புது தில்லியில் இருந்து காணொலி முறையில் வெள்ளிக்கிழமை தொடங்கி வைத்து பேசிய பிரதமர் மோடி.

**சென்னை, ஜூலை 28:** 'பூமித்தாயை பாதுகாப்பதும், பராமரிப்பதும் நமது அடிப்படை பொறுப்பு; உலகில் இருந்து பிளாஸ்டிக் பயன்பாட்டை முடிவுக்கு கொண்டு வர வேண்டியது மிக அவசியம்' என ஜி20 நாடுகளின் சுற்றுச்சூழல் அமைச்சர்கள் பங்கேற்ற மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

ஜி20 சுற்றுச்சூழல் பாதுகாப்பு மாநாடு சென்னையில் ஜூலை 26-ஆம் தேதி தொடங்கியது. இதற்கு முன்பு பெங்களூரு, குஜராத், மும்பை ஆகிய இடங்களில் இந்த மாநாடு நடைபெற்ற நிலையில், இறுதி மாநாடாக சென்னையில் நடைபெற்றது.

மாநாட்டின் கடைசி நாளான வெள்ளிக்கிழமை (ஜூலை 28) ஜி20 நாடுகள் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும், மேம்படுத்தவும், எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டன. இதில், ஜி20 நாடுகளின் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்கள் பங்கேற்றனர்.

இந்த மாநாட்டில் தில்லியில் இருந்தபடி, காணொலி முறையில் பங்கேற்று பிரதமர் மோடி பேசியது:

நமக்காக அனைத்தையும் இயற்கை வழங்கிக் கொண்டிருக்கிறது. அப்படி இருக்கும் போது இயற்கைக்கும் நாம் ஏதாவது செய்தாக வேண்டும்.

பூமித்தாயை பாதுகாப்பதும் பராமரிப்பதும் நமது அடிப்படை பொறுப்பு. இந்தப் பொறுப்புணர்வு சமீபகாலமாகப் புறக்கணிக்கப்படுவதால் பருவநிலையைப் பாதுகாக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். பருவநிலை மாற்றம், சுற்றுச்சூழல் பிரச்னைகளால் வளரும் நாடுகள் பாதிக்கப்படுகின்றன.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறனில் உலகின் முதல் 5 நாடுகளில் ஒன்றாக இந்தியா திகழ்கிறது. 2070-ஆம் ஆண்டுக்குள் மாசு இல்லாத நிலையை அடைய இலக்கு நிர்ணயித்துள்ளோம்.

இந்தியாவின் முன்முயற்சிகள் அனைத்தும் மக்களின் பங்களிப்பால் செயல்படுத்தப்படுகின்றன. 'அம்ருத் சரோவர்' என்ற நீர் பாதுகாப்பு இயக்கத்தின் மூலம் ஓராண்டில் 63 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நீர்நிலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. கடல் சார்ந்த பொருளாதாரத்தை மேம்படுத்த ஜி20 நாடுகளின் பங்களிப்பு உதவியாக இருக்கும்.

பிளாஸ்டிக் பயன்பாட்டையும், அதன்மூலம் ஏற்படும் மாசுபாட்டையும் முடிவுக்கு கொண்டு வர வேண்டியது அவசியம். இதற்காக ஜி20 நாடுகள் ஆக்கபூர்வ பணியில் ஈடுபட வேண்டும்.

சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும், மேம்படுத்தவும் கூட்டு நடவடிக்கை மிகவும் உதவும். இந்தியாவில் தனிநபர்கள், நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மரம் நடுதல், நீர் பாதுகாப்பு போன்ற நடவடிக்கைகளுக்கு தனிநபர்கள், உள்ளாட்சி அமைப்புகள், நிறுவனங்கள் மூலம் முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றன. இயற்கை அன்னைக்கு நாம் ஆற்ற வேண்டிய கடமைகளை ஒருபோதும் நாம் மறந்துவிடக் கூடாது. இந்த மாநாடு இயற்கையைப் பாதுகாக்கும் வகையில் ஆக்கப்பூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்ள துணையாக இருக்க வேண்டும் என்றார் பிரதமர்.

# சிறார் சீர்திருத்தமும் சமூகப் பாதுகாப்பும்!



பெ.கண்ணப்பன் ஐபிஎஸ்.

சமூகப் பாதுகாப்புத் துறையின் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வரும் சிறார் கூர்நோக்கு இல்லம், சிறார் சிறப்பு இல்லம், சிறார் இல்லம் ஆகியவற்றில் இருந்து சிறார்கள் தப்பிச் செல்கின்ற சம்பவங்கள் தொடர்ந்து நிகழ்கின்றன.

செங்கல்பட்டு சிறார் சிறப்பு இல்ல பாதுகாப்புப் பணியில் இருந்த காவலர்களைத் தாக்கிவிட்டு, சிறார்கள் அண்மையில் தப்பிச் சென்றதும், ஊழியர்களிடம் சிறார்கள் தகாத முறையில் நடந்துகொண்டதும், பணியின்போது பாதுகாப்பு கோரி சிறப்பு இல்லத்தில் பணிபுரியும் ஆசிரியர்கள், காவலர்கள் மற்றும் ஊழியர்கள் அண்மையில் போராட்டத்தில் ஈடுபட்டதும் சிறார் சீர்திருத்த இல்லங்களின் செயல்பாடுகளில் குறைகள் ஏதேனும் உள்ளனவா என்ற கேள்வியை எழுப்புகிறது.

கொலை, வழிப்பறி, பாலியல் வன்கொடுமை போன்ற கொடுங்குற்றங்களில் ஈடுபடும் சிறார்களின் எண்ணிக்கை நம் நாட்டில் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. கடந்த 10 ஆண்டுகளில் தமிழகத்தில் கொலைக் குற்றங்களில் ஈடுபட்ட சிறார்களின் எண்ணிக்கை மூன்று மடங்காக அதிகரித்துள்ளது.

சிறார் குற்றவாளியாக கண்காணிப்பில் இருந்தவர்கள் பலர், காலப்போக்கில் தொடர் குற்றங்களில் ஈடுபடும் ரௌடிகளாக உருவெடுத்து, சமுதாயத்தை அச்சுறுத்தும் கொடுங்குற்ற செயல்களில் ஈடுபடுகின்ற சம்பவங்கள் தொடர்கின்றன.

தண்டனைக்குரிய குற்றச் செயலில் ஈடுபட்ட 18 வயதுக்கும் குறைவான சிறுவனை அல்லது சிறுமியை காவல் துறையினர் கைது செய்து, சிறையில் அடைக்கக் கூடாது. மாறாக, அந்தக் குற்றம் மீதான விசாரணை முடியும் வரை, அவரை சமூகப் பாதுகாப்புத் துறையின் மேற்பார்வையில் இயங்கிவரும் சிறார் கூர்நோக்கு இல்லத்தில் தங்க வைக்க வேண்டும்.

அச்சிறார் குற்றம் புரிந்துள்ளார் என வழக்கு விசாரணையில் தீர்மானிக்கப்பட்டால், அதிகபட்சம் மூன்று ஆண்டுகள் தண்டனை வழங்கப்பட்டு, சிறார் சிறப்பு இல்லத்துக்கு அவர் அனுப்பிவைக்கப்படுவார். தண்டனைக் காலம் முடியும் வரை அல்லது 18 வயது பூர்த்தியாகும் வரை சிறப்பு இல்லத்தில் அவர் தங்கவைக்கப்படுவார்.

சென்னை, செங்கல்பட்டு, கடலூர், திருச்சி, சேலம், கோவை, திருநெல்வேலி உள்ளிட்ட இடங்களில் 9 சிறார் கூர்நோக்கு இல்லங்களும், தண்டனை வழங்கப்பட்ட சிறுவர்களுக்கு செங்கல்பட்டிலும், சிறுமிகளுக்கு சென்னை நகரிலும் சிறப்பு இல்லங்கள் சமூகப் பாதுகாப்புத் துறையின் கண்காணிப்பில் இயங்கி வருகின்றன.

செங்கல்பட்டில் 1887-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட சிறார் சீர்திருத்தப் பள்ளிதான் இந்தியாவில் தொடங்கப்பட்ட முதல் சிறார் சீர்திருத்தப் பள்ளியாகும். தற்போது தண்டனை பெற்ற சிறுவர்களைச் சீர்படுத்துவதற்காக அமைக்கப்பட்டுள்ள சிறார் சிறப்பு இல்லமும், சிறார் கூர்நோக்கு இல்லமும் செங்கல்பட்டில் ஒரே வளாகத்தில் அமைந்துள்ளன.

இந்த வளாகத்தில் அமைந்துள்ள சிறார் சிறப்பு இல்லத்தின் காவலர்களைத் தாக்கிவிட்டு சிறார்கள் சிலர் தப்பிச் சென்ற சம்பவமும், பணியின்போது சிறார்களிடம் இருந்து பாதுகாப்பு கோரி சிறப்பு இல்லத்தில் பணிபுரியும் ஆசிரியர்கள், காவலர்கள் மற்றும் ஊழியர்களின் போராட்டமும் அண்மையில் நிகழ்ந்துள்ளன.

கொடுங்குற்றச் செயலில் ஈடுபட்டதற்கான தண்டனைக் காலத்தைக் கழிப்பதற்காகவும், சமுதாயத்தில் இணைந்து வாழ நல்லொழுக்கத்தைக் கற்றுக் கொள்வதற்காகவும் சிறார் சிறப்பு இல்லத்துக்கு அனுப்பிவைக்கப்பட்ட சிறார்களின் செயல்களில் சீர்திருத்தம் ஏற்படாத சூழலைக் காண முடிகிறது. இதுகுறித்து அண்மையில் மேற்கொண்ட கள ஆய்வின் விவரங்கள் குறித்து பார்ப்போம்.

கூர்நோக்கு இல்லங்களிலும், சிறப்பு இல்லங்களிலும் தங்க வைக்கப்படும் சிறார்களைப் பராமரித்து, வழிநடத்துகின்ற வார்டன்கள், காவலர்கள் மற்றும் ஊழியர்களின் தகுதி, செயல்பாடுகள் பரிசீலனைக்குரியதாக உள்ளன.

> **கூர்நோக்கு இல்லத்தில் தங்கள் விருப்பப்படி செயல்பட அனுமதிக்காவிட்டால், உண்மைக்குப் புறம்பான புகாரை தங்கள் மீது சிறார்கள் சுமத்தி விடுவார்களோ என்ற அச்ச உணர்வு ஊழியர்களிடத்தில் இருப்பதை கள ஆய்வு வெளிப்படுத்துகிறது.**

குற்றச் செயலில் ஈடுபட்டதற்காக கூர்நோக்கு இல்லங்கள், சிறப்பு இல்லங்களில் தங்க வைக்கப்படும் சிறார்களை உளவியல் ரீதியாக அணுகி, அவர்களிடம் உள்ள குறை, நிறைகளைக் கண்டறிந்து, குற்றச் செயலில் ஈடுபடும் குணத்திலிருந்து அவர்களை மீட்டெடுத்து, நல்வழிப்படுத்த வேண்டிய ஊழியர்களுக்கு மதிநுட்பமும், சிறார்களைப் பொறுப்புணர்வுடன் அணுகும் குணமும் இருக்க வேண்டும். ஆனால், இந்த இல்லங்களில் வார்டன், இல்லக் காவல், சமையல், சுகாதாரப் பணி, தோட்டப் பணி போன்ற பணிகளுக்கு ஊழியர்கள் நியமனம் செய்யும்போது, குற்றச் செயல்களில் ஈடுபட்டு கூர்நோக்கு இல்லங்கள், சிறப்பு இல்லங்களில் தங்கியிருந்தவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கின்ற நடைமுறையே பின்பற்றப்படுகிறது.

சில ஆண்டுகளுக்கு முன்பு 200-க்கும் மேற்பட்ட ஊழியர்கள் இந்த நடைமுறையின்படி சிறார் கூர்நோக்கு மற்றும் சிறப்பு இல்லங்களில் பணி நியமனம் செய்யப்பட்டனர். இவர்களுக்கு 'குற்றப் பின்னணியுடைய சிறார்களை எப்படிக் கையாளுவது' என்பது குறித்த பயிற்சி எதுவும் வழங்கப்படவில்லை. ஆண்டுக்கு ஒருமுறை நட்சத்திர விடுதி ஒன்றில், இல்லத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு ஒருநாள் கருத்தரங்கம், பயிற்சி வகுப்புகளே நடத்தப்படுகின்றன.

கூர்நோக்கு மற்றும் சிறப்பு இல்லங்களில் தங்க வைக்கப்பட்டிருக்கும் சிறார்களுடன் 24 மணி நேரமும் தொடர்பில் இருக்கின்ற இல்ல ஊழியர்களில் சிலர், சிறார்களின் தவறான செயல்களுக்குத் துணை போகின்றனர் என்பதும், போதை பழக்கமுள்ள சிறார்களுக்கு போதைப் பொருள்கள் கிடைக்க ஊழியர்களில் சிலர் உதவி செய்கின்றனர் என்பதும், இல்லத்திலுள்ள கைப்பேசி மூலம் நீண்ட நேரம் வெளிநபர்களுடன் சில சிறார்கள் கண்காணிப்பின்றி பேச அனுமதிக்கப்படுகின்றனர் என்பதும் கள ஆய்வில் தெரிய வருகிறது.

சீர்திருத்தும் நோக்கத்துக்காக, சிறப்பு இல்லத்தில் தங்க வைக்கப்பட்டிருக்கும் குற்றப் பின்னணி உடைய சிறார்களைக் கண்டு இல்லக் காவலர்களும், ஊழியர்களும் பயப்படக் காரணம் என்ன?

ஆறு மாதங்களுக்கு முன்பு திருட்டு குற்றத்தில் சம்பந்தப்பட்ட ஒரு சிறுவனை ரயில்வே காவல் துறையினர் செங்கல்பட்டு கூர்நோக்கு இல்லத்தில் ஒப்படைத்தனர். மறுதினம் அந்தச் சிறுவன் மருத்துவமனையில் உயிரிழந்தான். கூர்நோக்கு இல்லத்தில் நடத்திய தாக்குதலால் அந்தச் சிறுவன் உயிரிழந்தான் என கொலை வழக்குப் பதிவு செய்யப்பட்டு, கூர்நோக்கு இல்லத்தின் நிர்வாகப் பொறுப்பில் இருந்த உயரதிகாரிகள் உள்பட ஊழியர்கள் சிலர் கைது செய்யப்பட்டனர்.

கடந்த காலங்களில் காவல் நிலையங்களுக்கும் சிறைச்சாலைகளுக்கும் அழைத்து வரப்படும் குற்றவாளிகளை விசாரணையின்றி அடிக்கும் நடைமுறை பின்பற்றப்பட்டு வந்தது. தற்போது இந்த நடைமுறை தவிர்க்கப்பட்டுவருகிறது. ஆனால், குற்ற வழக்கில் பிடிபட்டு, கூர்நோக்கு இல்லங்களுக்கு அழைத்து வரப்படும் சிறார்களை இல்லத்தில் பணிபுரியும் ஊழியர்கள் அடிக்கின்ற நடைமுறை தொடர்கிறது.

கூர்நோக்கு இல்ல சிறுவன் இறந்து போன வழக்கின் முதல்கட்ட விசாரணையில், இல்ல நிர்வாகப் பொறுப்பிலிருந்த உயரதிகாரிகளும் அச்சிறுவனை அடித்ததாக கூர்நோக்கு இல்லத்தில் தங்கியிருந்த சிறார்கள் சிலர் வாக்குமூலம்கொடுத்தனர். அதன் அடிப்படையில் ஊழியர்கள் மட்டுமன்றி, கூர்நோக்கு இல்ல நிர்வாகப் பொறுப்பிலிருந்த உயரதிகாரிகளும் குற்றவாளிகளாகச் சேர்க்கப்பட்டனர். இந்த வழக்கு தற்போது சி.பி.சி.ஐ.டி. விசாரணையில் உள்ளது.

ஒரு குற்ற வழக்கில் தொடர்பில்லாத நபர்களைக் குற்றவாளிகளாகச் சேர்த்தால், அது எதிர்மறையான விளைவுகளை சமுதாயத்தில் ஏற்படுத்தி, பொது அமைதியைச் சீர்குலைத்துவிடும். கூர்நோக்கு இல்லத்தில் தங்கள் விருப்பப்படி செயல்பட அனுமதிக்காவிட்டால், உண்மைக்குப் புறம்பான புகாரை நிர்வாகப் பொறுப்பில் இருப்பவர்கள் மீது கொடுத்து, இல்ல நிர்வாகத்தையே நிலைகுலையச் செய்துவிடலாம் என்ற உணர்வு சிறார்களிடத்திலும், தங்கள் மீது சிறார்கள் பொய்ப் பழி சுமத்திவிடுவார்களோ என்ற அச்ச உணர்வு ஊழியர்களிடத்திலும் இருப்பதை கள ஆய்வு வெளிப்படுத்துகிறது.

சிறார் சிறப்பு இல்லங்களில் தங்கியிருக்கும் ஒவ்வொரு சிறுவருக்கும் மாதந்தோறும் ஐந்து ரூபாய் கைப் பணம் (பாக்கெட் மணி) ஆகக் கொடுக்கும் பழக்கம் நீண்ட காலமாக நடைமுறையில் இருந்து வருகிறது. சிறப்பு இல்லத்தில் இருந்து சிறாரை விடுவிக்கும்போது இந்த கைப் பணம் அளிக்கப்படுகிறது.

இன்றைய காலகட்டத்தில் சிறாருக்கு மாதம் ஒன்றுக்கு கைச்செலவுக்கென ஐந்து ரூபாய் கைப்பணமாகக் கொடுப்பது என்பது நகைப்புக்குரிய செயலாகும். காலத்துக்கேற்ப கைப்பணத்தின் அளவை உயர்த்தி வழங்குவது குறித்து சமூகப் பாதுகாப்புத் துறையும், தமிழ்நாடு அரசும் பரிசீலனை வேண்டியது அவசியம்.

செங்கல்பட்டில் அமைந்துள்ள சிறார் கூர்நோக்கு இல்லம், சிறப்பு இல்லப் பாதுகாப்புப் பணியை இல்லக் காவலர்கள் மேற்கொண்டு வருகின்றனர். ஆனால், சில கூர்நோக்கு இல்லங்கள் மற்றும் சிறப்பு இல்லத்தின் பாதுகாப்புப் பணியை ஆயுதம் ஏந்திய காவலர்கள் மேற்கொண்டுவருகின்றனர்.

தமிழகம் முழுவதிலும் அமைந்துள்ள கூர்நோக்கு இல்லங்கள், சிறப்பு இல்லங்களின் பாதுகாப்பு குறித்து முறையான ஆய்வு செய்து, அனைத்து இல்லங்களின் பாதுகாப்பை முன்னாள் ராணுவத்தினரிடம் ஒப்படைப்பது குறித்து அரசு பரிசீலனை செய்ய வேண்டும்.

கூர்நோக்கு, சிறப்பு இல்லங்களில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களுக்கும் குற்றப் பின்னணி உடைய சிறார்களைக் கையாளுவது தொடர்பான பணியிடைப் பயிற்சி வழங்குவது குறித்தும் அரசு பரிசீலனை செய்ய வேண்டும்.

சிறார்களை முறையாக வழிநடத்தத் தவறினால், அவர்களை கைதேர்ந்த குற்றவாளிகளாக மாற்றும் நாற்றங்கால்களாக அந்த இல்லங்கள் மாறிவிடும் அபாயம் உள்ளது.

கட்டுரையாளர்:
**காவல்துறை அதிகாரி (ஓய்வு).**

# வலிமையான, வளமான நாடு உருவாக...

இரா. சாந்தகுமார்

தமிழகத்தில் மக்கள்தொகை பெருக்கத்தைக் குறைப்பதற்காக 4,000 அரசுப் பேருந்துகளில் விழிப்புணர்வு வாசகங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. அப்போது, தமிழக சுகாதாரத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் பேசும்போது, 'தற்போது தமிழகத்தின் மக்கள்தொகை சுமார் 8.4 கோடி. இதே நிலையில் மக்கள்தொகை கூடுமேயானால், வாழ்வாதாரமே கேள்விக்குறியாகும்' என எச்சரித்தார்.

இயல்பான கருத்தரிப்பு ஒருபுறம் எனில், செயற்கைக் கருத்தரிப்பு மையங்கள், வாடகைத் தாய் மூலம் குழந்தை பெறுதல், இளம் வயது திருமணம், இரண்டு குழந்தைகளின் பிறப்புக்கு இடையே போதிய இடைவெளியின்மை, குழந்தைகளின் இறப்பு விகிதம் குறைவு போன்ற பல்வேறு காரணங்களால் மக்கள்தொகை அதிகரித்து வருகிறது.

மேலும், மருத்துவத் துறையின் அபரிதமான வளர்ச்சியால், உலக அளவில் 1990-ஆம் ஆண்டு இருந்த மனிதர்களின் சராசரி ஆயுள்காலம் 64.6 ஆண்டுகள் என்ற நிலை, 2019-ஆம் ஆண்டு 72.6 ஆண்டுகள் என உயர்ந்துள்ளதும் காரணமாகும்.

1951-ஆம் ஆண்டு நாட்டில் கணக்கெடுப்பு நடத்தப்பட்டபோது மக்கள்தொகை சுமார் 36 கோடி. 1952-ஆம் ஆண்டு பிறப்பு விகிதத்தைக் குறைப்பதை அடிப்படையாகக் கொண்டு தேசிய குடும்பக் கட்டுப்பாடு இயக்கம் கொண்டுவரப்பட்டது.

பின்னர், ஒரு குடும்பத்துக்கு இரண்டு குழந்தைகள் மட்டும்போதும் என்பதை வலியுறுத்தும் வகையில், 'நாம் இருவர், நமக்கிருவர்' என்ற பிரசாரத்தை அரசு முன் வைத்தது. எனினும், அரசின் குடும்ப கட்டுப்பாடு திட்டம் எதிர்பார்த்த பலனை அளிக்கவில்லை.

2011-ஆம் ஆண்டு நடத்தப்பட்ட கணக்கெடுப்பின்படி மக்கள்தொகை சுமார் 121 கோடி. அப்போதைய தமிழகத்தின் மக்கள்தொகை சுமார் 7 கோடியே 21 லட்சம்.

தமிழகத்தின் மொத்த நிலப்பரப்பு 1,30,058 சதுர கிலோ மீட்டராக உள்ள நிலையில், ஒரு மக்கள் அடர்த்தி சதுர கிலோ மீட்டருக்கு சுமார் 550 நபர் என இருந்தது. தமிழகத்தில் தற்போது மக்கள்தொகை மேலும் அதிகரித்துள்ள நிலையில் ஒரு சதுர கி.மீ. பரப்பளவுக்கான மக்கள்தொகை நெருக்கமும் அதிகரித்துள்ளது.

உலகின் மொத்த நிலப்பரப்பில் 2.4 சதவீதமே நம் நாட்டின் பரப்பளவாகும். ஆனால் உலக மொத்த மக்கள்தொகையில் 17.5 சதவீதம் பேர் உள்ள நம் நாட்டில், ஒரு சதுர கி.மீ.க்கு சுமார் 450 பேர் வசிக்கின்றனர். எனவே, நாட்டின் நிலப்பரப்புக்கு ஏற்ப மக்கள்தொகையை கட்டுப்படுத்த வேண்டியது மிக அவசியம்.

நிலப்பரப்பு அதிகரிக்காத நிலையில், மக்கள்தொகை மட்டும் ஆண்டுதோறும் அதிகரித்து வருவது சமூக, பொருளாதார தலங்களில் பல்வேறு பிரச்னைகளை உருவாக்கியுள்ளது.

மக்கள்தொகை அதிகரிப்பதற்கு ஏற்ப விளைநிலங்களை வசிப்பிடங்களாக மாற்றுவது, பெருகிவரும் வாகனங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப சாலைகளை அமைத்தல், இதற்காக காடுகளும் மரங்களும் பெருமளவில் அழிக்கப்படுவது சுற்றுச்சூழல் சமநிலையை பாதிப்புக்குள்ளாகிறது. இதன் விளைவாக வெப்ப அலை, பெருமழை, வெள்ளம், புயல், நிலச்சரிவு போன்ற இயற்கை சீற்றங்களை எதிர்கொள்ள நேர்கிறது.

கிராமப்புறங்களில் இருந்து நகரங்களுக்கு மக்கள் பெருமளவில் குடிபெயர்வதால் நகர்மயமாதல் அதிகரித்து வருகிறது. இதனால் நகரங்களில் குடிநீர்த் தட்டுப்பாடு, சுகாதாரச் சீர்கேடு, பொது போக்குவரத்து வாகனங்களில் நெரிசல் என்பது நகரங்களில் அன்றாட நிகழ்வுகளாகிவிட்டன.

2021-ஆம் ஆண்டு நடைபெற வேண்டிய நாட்டின் 11-ஆவது மக்கள்தொகை கணக்கெடுப்பு கரோனா பெருந்தொற்று காரணமாக நடைபெறவில்லை.

நாட்டின் மக்கள்தொகை அதிகரிப்பதற்கு ஏற்ப முதியோர் எண்ணிக்கையும் வெகுவாக உயர்ந்து வருகிறது. 2021-ஆம் ஆண்டு நாட்டின் மக்கள்தொகையில் 7.5 சதவீதமாக இருந்த முதியோர் எண்ணிக்கை, 2026 -ஆம் ஆண்டில் 12.5 சதவீதமாக அதிகரிக்கூடும் என்று தெரிய வருகிறது. இது 2050 -ஆம் ஆண்டில் 19.5 சதவீதமாக மேலும் அதிகரிக்கக் கூடும்.

மக்கள்தொகை நெருக்கத்தை கட்டுப்படுத்தாவிடில் மொத்த மக்கள்தொகையில் ஐந்தில் ஒரு பங்கு முதியோர் இருப்பர். இந்த நிலையில், அவர்களுக்கான மருத்துவம், சுகாதாரம், சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் ஆகியவற்றுக்காகச் செலவிடப்படும் தொகை கணிசமாக உயரும்.

அமெரிக்கா, பிரிட்டன், கனடா போன்ற வளர்ந்த நாடுகளில் கருத்தடை சாதனங்களை உபயோகிப்பதில் பெண்களுக்கு உள்ள விழிப்புணர்வு, ஆப்பிரிக்கா தென் அமெரிக்கா ஆசியா கண்டங்களில் உள்ள வளரும் நாடுகளில் இல்லை. உதாரணமாக, பிரிட்டனில் பதினாறு முதல் நாற்பத்தியாறு வயது வரையிலான பெண்களில் எழுபத்தாறு சதவீதம் பேர் கருத்தடை சாதனங்களை உபயோகிக்கின்றனர். ஆனால் வளரும் நாடுகளில் கருத்தடை சாதனங்களை உபயோகிக்கும் பெண்களின் எண்ணிக்கை 43 சதவீதம் மட்டுமே.

மக்கள்தொகை பெருக்கத்தால் கிட்டும் போதுமான மனித வளம், உணவுப் பொருள் உற்பத்தி, தொழில் வளர்ச்சி போன்ற நன்மைகளைவிட, உணவு பற்றாக்குறை, போதிய மருத்துவ வசதியின்மை, வேலையில்லா பிரச்னை, சுகாதாரச் சீர்கேடு, சுற்றுச்சூழல் சீரழிவு, சாலை விபத்துகள், குற்றச் செயல்கள் அதிகரிப்பு என எதிர்மறை விளைவுகளே அதிகம்.

எனவே, விழிப்புணர்வை ஏற்படுத்தி, மக்கள்தொகை பெருக்கத்தை கட்டுக்குள் கொண்டு வந்தால் மட்டுமே நாட்டை வலிமையான, வளமையான நாடாக உருவாக்க இயலும்.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# சென்னை ஹாக்கி மைதானத்தில் புதிய செயற்கை இழை ஆடுகளம்

## முதல்வர் திறந்து வைத்தார்






சென்னை எழும்பூர் மேயர் ராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கத்தில் ரூ.16 கோடியில் ஒலிம்பிக் தரத்தில் மேம்படுத்தப்பட்ட புதிய செயற்கை இழை மைதானம், கலைஞர் நூற்றாண்டு பார்வையாளர் மாடத்தை வெள்ளிக்கிழமை திறந்துவைத்த முதல்வர் மு.க.ஸ்டாலின். உடன் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், துறைச் செயலர் அதுல்ய மிஸ்ரா உள்ளிட்டோர்.

**சென்னை, ஜூலை 28:** சென்னை எழும்பூரில் உள்ள மேயர் ராதாகிருஷ்ணன் ஹாக்கி மைதானத்தில் மேம்படுத்தப்பட்ட புதிய வசதிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின், வெள்ளிக்கிழமை திறந்து வைத்தார்.

ஆசிய ஆடவர் ஹாக்கி சாம்பியன்ஸ் கோப்பைப் போட்டி வரும் 3-ஆம் தேதி முதல் 12-ஆம் தேதி வரை சென்னையில் நடைபெறவுள்ளது.

16 ஆண்டுகளுக்குப் பிறகு சென்னையில் மீண்டும் நடைபெறும் இந்தப் போட்டியை ஹாக்கி இந்தியாவுடன் இணைந்து தமிழ்நாடு அரசு நடத்தவுள்ளது. இந்தப் போட்டியில் இந்தியா, சீனா, பாகிஸ்தான், மலேசியா, ஜப்பான் மற்றும் தென் கொரியா ஆகிய 6 நாடுகளின் அணிகள் பங்கேற்கின்றன.

ஹாக்கிப் போட்டியை சிறப்பாக நடத்துவதற்காக, அரசின் சார்பில் ரூ.17.33 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் போட்டியை நடத்துவதற்காக ரூ.12 கோடி ஹாக்கி இந்தியா நிர்வாகிகளிடம் வழங்கப்பட்டுள்ளது.

**விளையாட்டு மைதானம்:** சர்வதேச அளவிலான போட்டியை சிறப்பாக நடத்தும் வகையில், ரூ.16 கோடி மதிப்பில் எழும்பூரில் உள்ள ராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கம் புதுப்பிக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு எதிர்வரும் பாரிஸ் ஒலிம்பிக் போட்டிகள் நடத்தப்பட உள்ளன. அங்கு எந்தத் தரத்தில் ஹாக்கி செயற்கை இழை ஆடுகளம் இருக்குமோ, அதே தரத்திலான முதன்மை ஹாக்கி செயற்கை இழை ஆடுகளம் அமைக்கப்பட்டுள்ளது.

வீரர்கள் பயிற்சி பெறுவதற்கான ஆடுகளம், பார்வையாளர்களுக்கான இருக்கை வசதிகள், சிறப்பு விருந்தினர்கள் அமருவதற்கான பார்வையாளர் மாடம், விளையாட்டு வீரர்களுக்கான அறைகள், மின்னொளி வசதிகள், நவீன கழிப்பிட வசதிகள் மற்றும் பிற சீரமைப்புப் பணிகள் மேயர் ராதாகிருஷ்ணன் விளையாட்டு மைதானத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**கருணாநிதி பெயரில் மாடம்:** ஹாக்கி விளையாட்டு மைதானத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள புதிய பணிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெள்ளிக்கிழமை திறந்து வைத்துப் பார்வையிட்டார். மேலும், முன்னாள் முதல்வர் கருணாநிதி நூற்றாண்டு பார்வையாளர் மாடத்தையும் அவர் திறந்தார்.

ஆசிய ஆடவர் ஹாக்கி கோப்பை போட்டியின் நினைவாக மைதான வளாகத்தில் சிலை அமைக்கப்பட்டுள்ளது.

இரண்டு வீரர்கள் ஹாக்கி விளையாடுவது போன்ற சிலைக்குக் கீழே, திருக்குறள் எழுதப்பட்டுள்ளது. தெய்வத்தான் ஆகாதெனினும் முயற்சிதன் மெய்வருத்தக் கூலி தரும் என்ற குறள் தமிழில் எழுதப்பட்டு, அதற்கான விளக்கம் ஆங்கிலத்தில் கூறப்பட்டுள்ளது.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**